


நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை சார்பில் சிறுபான்மையின மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி.கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் பங்கேற்று 293 பயனாளிகளுக்கு ரூபாய் 22,03,280, மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன் நெல்லை மத்திய மாவட்டச் செயலாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ., ஞானதிரவியம் எம்.பி,ரூபி மனோகரன் எம்.எல்.ஏ,மேயர் சரவணன், துணை மேயர் ராஜ்,மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ் உட்பட பலர் உள்ளனர்.



செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் திருவாரூரில் நடைபெற்ற "ஈடில்லா ஆட்சி. ஈராண்டே சாட்சி என்ற தமிழ்நாடு அரசின் இரண்டு சாதனை குறித்த புத்தக வெளியீட்டு விழாவில் , நலத்திட்ட உதவிகளை அமைச்சர் பெருமக்கள் எ.வ.வேலு , ஐ.பெரியசாமி, முனைவர்.டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் வழங்கினர். சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி.கே.கலைவாணன் தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் , தாட்கோ தலைவர் உ.மதிவாணன், க.மாரிமுத்து, மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

### நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

# கலைஞர் நூற்றாண்டு விழாவை நாகை மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொண்டாடுவோம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை, மே 19 -

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன் தலைமை தாங்கினார். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், ப.கோவிந்தராசன், க.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் பேசினார். கூட்டத்தில் கழக தீர்மானக்குழு உறுப்பினர் காமராஜ், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு துணைச் செயலாளர் சாகுல்ஹமீது, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், கற்பகம், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன், மகா.குமார், ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த், கே.பழனியப்பன், சோ.பா.மலர்வண்ணன், உதயம் வே.முருகையன், என்.சதாசிவம், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், சி.சுப்பரமணி யன், மரிய சார்லஸ், முகமதுசுல்தான், பொதுக்குழு உறுப்பினர்கள் எல்.எஸ்.பழனியப்பன், பன்னீர்செல்வம், கோ.சிவக்குமார், எம்.பாண்டியன்,

எஸ்.பி.டி.சார்லஸ், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இரா.முருகையன், ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, அ.பாரிபாலன், எஸ்.கே.ஜி.ஏ.சேகர், சத்தியமூர்த்தி, பெ,முருகானந்தம், கேஸ் வி.செந்தில், செல்வராணி, புவனேஸ்வரி செந்தில், எஸ்.வி.டி,அருள், ஒன்றியக் குழு தலைவர்கள் ஆர்.ஜி.தமிழரசி, செல்வராணிஞானசேகரன், வாசுகி நாகராஜன்,ர அனுசியா மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர்கள் இரா.தங்கதுரை, விமல்மொக்கை ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

தமிழ்நாடு சட்ட மன்ற தேர்தலில் 13 முறை போட்டியிட்டு 13 முறையும் வெற்றிப் பெற்று 19 ஆண்டு காலம் 5 முறை தமிழக முதல்வர், 50 ஆண்டுகாலம் கழகத் தலைவர், பல இந்திய குடியரசு தலைவர்கள், பிரதமர்களை தேர்ந்து எடுத்து, இந்திய துணை கண்டத்திற்கே வழிகாட்டியாக, 60 ஆண்டுகாலம் திரைப்படத்துறை, பத்திரிக்கை துறை, , இலக்கியம் , நாடகம், சொற்பொழிவு என தொட்ட அனைத்து துறைகளிலும் சிகரமாக உயர்ந்து நின்ற நமது நெஞ்சமெல்லாம் நிறைந்து வாழ்கின்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாளான ஜூன் 3ம் தேதி தொடங்கி நடைபெறும் விழாவை நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளை, வார்டுகள் தோறும் கழக கொடி ஏற்றி, மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா எழுதுப்பொருட்களை வழங்கியும், ஏழை எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், முதியோர், ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கு உணவு, உடை வழங்கியும் சிறப்பாக கொண்டாடுவது என்றும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தலைமைக் கழகம் சார்பில் திருவாரூர் காட்டூர் நடைபெற உள்ள மாநாட்டில் நாகை மாவட்டத்தில் இருந்து அதிக அளவில் கழகத்தினர் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்றும் .

தமிழ்நாட்டில் அனைத்து தரப்பு மக்களின் வாழ்க்கை தரம் உயர அனுதினமும் உழைத்துக்கொண்டிருக்கும் நம் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அமைச்சரவையில் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றிருக்கும் உதயநிதிஸ்டாலின் அவர்கள் நாகை மாவட்டத்திற்கு ஜூன் 16ம் தேதி வருகை தந்து தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக மூத்த முன்னோகளுக்கு பொற்கிழி விருதுகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியிலும் திராவிட முன்னேற்ற க் கழக மாவட்ட அலுவலக கட்டுமான பணிகளை துவக்கி வைக்கவும், நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும், கீழையூர் ஒன்றியக் கழகச் செயலாளர் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன் இல்ல திருமண விழாவில் கலந்து கொள்ளவும் நாகை மாவட்டத்திற்கு அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் வருகை தரும் போது சாலையின் இரண்டு பக்கமும் கழகத்தினர் திரண்டு நின்று சிறப்பான மாபெரும் வரவேற்பு எழுச்சியுடன் வழங்கிடுவது என்றும், இதற்கானஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் சிறப்பாக செய்திட வேண்டும் என்றும்,

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்க தற்போது அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் சிறப்பாக நடைபெற்று வரும் கழக புதிய உறுப்பினர் உறுப்பினர் சேர்க்கும் பணியை மேலும் தீவிர படுத்தி எதிர் வரும் மே.30ம் தேதிக்குள் தங்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள இலக்குகளை முடித்து பூர்த்தி செய்து விண்ணப்ப படிவத்தை மாவட்டக் கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்ளை கேட்டுக் கொள்வது என்றும், வரவிருக்கும் கூட்டுறவு சங்க தேர்தல்களில் நாம் கழக தோழர்கள், நிர்வாகிகளாக வெற்றி பெற கழக தோழர்களை உறுப்பினர்களாக அதிக அளவில் சேர்த்திட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### வட சென்னை பசுமை பாதுகாப்பு அறக்கட்டளை சார்பில்

# மரக்கன்று நடுதல்! மஞ்சப்பை வழங்கும் நிகழ்ச்சி!

## ச.தமிழ்ச்செல்வன் - என்.மருது கணேஷ் பங்கேற்பு!

சென்னை மே 19-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி வடசென்னை பசுமை பாதுகாப்பு அறக்கட்டளை சார்பில் கடந்த 26.04 .2023 அன்று மாவட்டச் செயலாளர், தா. இளையஅருணா தலைமையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக வட சென்னை பகுதியில் உள்ள வண்ணாரப் பேட்டை எம். சி.எம். தோட்டத்தில் சித்தி விநாயகர் ஆலய விழா குழுவின் துணையோடு மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி மாவுமில் ஜெ.முருகேசன் தலைமையில்

வட்ட செயலாளர் ச.தமிழ்ச்செல்வன் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் வட சென்னை பசுமை பாதுகாப்பு அறக்கட்டளை நிறுவனர் வழக்கறிஞர் என்.மருது கணேஷ் மரக்கன்றுகளை நட்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

அதன் பின் பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்துவதை தவிர்க்கும் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யப்பட்டு,பொது மக்களுக்கு மஞ்சப்பை இலவசமாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வழக்கறிஞர் ஆர்.மகேஸ்வரன், பத்திரிக்கையாளர் எஸ்.கே.ஹரிபாபு,

எஸ்.லோகநாதன், டி. நாராயணன், கே. வெங்கடேசன், இ.லோகநாதன், எஸ்.உதயசூரியன்,

பி.சந்திரசேகர், ஆர். வேணுகோபால், சாணை பட்டறை முருகேசன், எஸ்.உதயசூரியன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

மரக்கன்றுகள் நட்டு வளர்க்க விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய எண் 9840034950



பால்வளத்துறை அமைச்சர் த.மனோதங்கராஜ் சேலம், ஆவின் பால்பண்ணை வளாகத்தில் கால்நடைகளுக்கு தீவனமாக வழங்கப்படும் கரனைகள் பயிரிடப்பட்டுள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மரு.த.சுப்பையன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள் மற்றும் முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி ஆகியோர் உள்ளனர்.

### அரசு ஊழியர் - ஆசிரியர்களுக்கு

# 4 சதவீதம் அகவிலைப்படி உயர்வு அறிவித்த முதல்வருக்கு நன்றி!

## தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில தலைவர் கு. தியாகராஜன் அறிக்கை !

சென்னை, மே 19 -

4 சதவிகித அகவிலைப்படி உயர்வு அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் நன்றி தெரிவித்து அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற காலம் கொரோனா நெருக்கடி மிகுதியாக இருந்த காலம் அக்காலங்களில் 11 சதவீதம் மட்டுமே அகவிலைப்படியை உயர்த்துவார் என்று எதிர்பார்த்து காத்திருந்த வேளையில் 14% உயர்த்தி வழங்கியிருந்தார். மேலும் ஒன்றிய அரசு அறிவித்து ஆறு மாத கால இடைவெளிக்கு பிறகு மாநில அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு அறிவித்ததின் மூலம் மிகுந்த இழப்பு ஏற்பட்டதையும் முதல மைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் சுட்டிக்காட்டி இருந்தது. இவ்வேளையில் தற்பொழுது அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு 4 சதவீதம் அகவிலைப்படி உயர்த்தி 38 சதவீதத்திலிருந்து 42 சதவீதமாக அகவிலைப்படி உயர்த்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணை வெளியிட்டிருக்கிறார்.

மேலும் இனிவரும் காலங்களில் ஒன்றிய அரசு எப்போது எல்லாம் அகவிலைப்படி உயர்த்தி அறிவிக்கிறதோ அப்பொழுது உடனடியாக மாநில அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு உயர்த்தி வழங்கப்படும் என நம்பிக்கையும் அறிவித்து உள்ளார்கள்.

இதிலிருந்து என்றென்றைக்கும் ஆசிரியர் அரசு ஊழியர்களின் பாதுகாவலனாக தி.மு.க அரசு இருக்கும் தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் இருப்பார் என்ற நம்பிக்கை ஆசிரியர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

அகவிலைப் படி உயர்த்தி வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் சார்பாக கோடான கோடி நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம் மேலும் எங்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான ஆணையர் பணியிடத்தை ரத்து செய்ய வேண்டும் என்பதை கனிவோடு பரிசீலனை செய்து முதல் கட்டமாக ஆணையரை பணியிடை மாற்றம் செய்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த சில நாட்களுக்கு முன்பாக ஆணை பிறப்பித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்வியை மாநில பட்டியலுக்கு கொண்டு வர வேண்டும் என்று தொடர்ந்து குரல் கொடுத்து வருபவர், மேலும் தமிழ்நாட்டிற்கு என்று ஒரு கல்விக் கொள்கையை தனியாக உருவாக்க ஒரு குழுவை அமைத்து இந்தியா முழுமைக்கும் ஒரு முன்மாதிரி முதல்வராக திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

எங்களின் கோரிக்கைகளை படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை எங்கள் நன்றியை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் , மாநில ஒருங்கிணைப்பாளர், மற்றும் செய்தி தொடர்பாளர் ஜாக்டோ ஜியோ. கு.தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

### வல்லம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# தொண்டூரில் அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை!

செஞ்சி, மே 19 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வல்லம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் தி.மு.க. அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டம் தொண்டூர் ஊராட்சியில் நடைபெற்றது.

வல்லம் வடக்கு ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் சின்னையா, ஒன்றியகவுன்சிலர்கள் கோமதி பிரபாகரன், இந்துமதி வெற்றிவேல், நிர்வாகிகள் மணி, புண்ணிய தாஸ், ராமலிங்கம், சுப்பிரமணி, ஏழுமலை, கருணாகரன், வெற்றி விஜயன், முத்துதாஸ், ராஜீவ் காந்தி, தளபதி மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய கவுன்சிலர் அமிர்தம் அரிகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார். ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் தொடக்க உரையாற்றினார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத் துறை அமைச்சருமான செஞ்சி மஸ்தான்கலந்து கொண்டு தி.மு.க. அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட கவுன்சிலர் அன்பு செழியன், அவைத்தலைவர் ஏழுமலை, பொருளாளர்பெருமாள், துணை செயலாளர்கள் ராஜலிங்கம், மணிமேகலை ரவிச்சந்திரன், மாவட்ட பிரதிநிதிகள் துரை திருநாவுக்கரசு, ரவிச்சந்திரன், முன்னாள் பொருளாளர் தமிழரசன்,பிரபாகரன், நீர் பெருத்தகரம் கோபாலகிருஷ்ணன், ஊராட்சி மன்ற தலைவர்கள் பெரிய குழந்தை, லோகேஷ், பூவிழி மணிவண்ணன், பன்னீர் செல்வம், சசிகலா மகேஷ், சரளா, சரசு ராமதாஸ், சிவமூர்த்தி, புனிதவதி, கல்பனா, தனசேகரன், உள்ளிட்ட ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள் அனைத்து அணி பொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.ஒன்றிய துணை செயலாளர் ஞானமூர்த்தி நன்றி கூறினார்.



நாகை மாவட்டம் மயிலாடுதுறை வானகிரியைச் சேர்ந்த மீனவர்கள் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இந்திய கடலோர காவல் படை சந்தேகத்தின் பேரில் துப்பாக்கிச் சூடு நடத்தி விசைப்படகில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்களை கைது செய்து விசாரித்து பின்னர் விடுதலை செய்தது. துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்த மீனவர் கே.வீரவேல் இதுவரை கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லாமல் அச்சத்துடனே வாழ்ந்து வருவதாகவும் தனக்கு உதவிடுமாறு மாநில மீனவரணி துணைத் தலைவர் திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கரை சந்தித்து கோரிக்கை வைத்தார். அவருக்கு ஆறுதல் கூறி மாநில மீனவரணி சார்பில் ரூபாய் 1,00,000 வழங்கினார். முன்னதாக துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்த மீனவர்கள் செல்வகுமார், சுரேஷ், செல்வதுரை, மோகன்ராஜ் ஆகியோருக்கு தலா ரூபாய் 25,000 வீதம் ஒரு லட்ச ரூபாய் (1,00,000) வழங்கி உதவினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி. மோகனன்

### மே 19 (2021)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கியவர்.

புழல் ஒன்றியம், செட்டிமேடு கிளைச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**